2010 மே 11]

162—

தேயிலை

***47822—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் உற்பத்தியாகும் தேயிலையைக் கொள்முதல் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வால்பாறை பகுதியில் உற்பத்தியாகும் தேயிலை, தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் (TANTEA) என்ற அரசு சார்ந்த நிறுவனத்தால் கொள்முதல் செய்யப்படுகிறது. அரசு கொள்முதல் செய்வதில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறையில் ஒரு கிலோ தேயிலையைத் தயார் செய்ய ஐம்பது ரூபாய் ஆகின்றது. அதை கிலோ ரூ.90/- முதல் ரூ.119/- வரை விற்கின்றார்கள். நல்ல தரம் வாய்ந்த தேயிலைத் தூள் ரூ.140/- வரையில் விற்கப்படுகிறது. ஒரு கிலோவுக்கு சுமார் ரூ.50/- முதல் ரூ.60/- வரையில் இலாபம் கிடைக்கிறது. வால்பாறையில் ஊட்டியிலிருக்கும் Parry Agro நிறுவனம் முடீஸ் தேயிலை வாங்குகிறது. இலாபமும் அதிகமாக வருகிறது. ஆனால் நல்ல தரம் வாய்ந்த தேயிலைத் தூள் கிடைப்பதில்லையென்று மக்கள் வருத்தமடைந்து கொண்டிருக்கின்றார்கள்.

இதை Management எவ்வளவு விலைக்கு விற்கிறார்கள்? எவ்வளவு டன் விற்கிறார்கள் என்று தொழிலாளர்களுக்குத் தெரியாது. சில இடங்களில் தேயிலைத் தூளை கலப்படமாகவும் விற்கின்றார்கள். கலப்படம் செய்த நிறைய பேர்களைப் பிடித்திருக்கின்றார்கள். நல்ல தரம் வாய்ந்த தேயிலைத் தூள் வேண்டுமென்று இப்பொழுது மக்கள் விரும்புகின்றார்கள்.

வால்பாறையில் இடைத்தரகர்கள் வாங்குகிறார்கள். சில சமயம் கேரளா மாநிலத்திற்கும், கொச்சினுக்கும் கொண்டு போய் விற்கின்றார்கள். இதில் மிகப் பெரிய இலாபத்தை இடைத்தரகர்களும், வியாபாரிகளும் சம்பாதிக்கின்றார்கள். ஆகவே, அரசே வால்பாறையில் தேயிலையைக் கொள்முதல் செய்தால், அரசுக்கு மிகுந்த இலாபம் வரும்; தொழிலாளிகளும் நன்மை அடைவார்கள், நல்ல சம்பளமும், போனசும் தொழிலாளர்களுக்குக் கிடைக்கும். ஆகவே, அரசே வால்பாறையில் தேயிலைக் கொள்முதல் நிலையம் ஒன்றை அமைத்து, அங்கே உற்பத்தியாகின்ற தேயிலையைக் கொள்முதல் செய்ய முன்வருமா? TANTEA தொழிலாளர்கள் சில எஸ்டேட்டுகளினுடைய தேயிலையை மட்டும்தான் கொள்முதல் செய்கின்றார்கள். ஆகவே, வால்பாறையிலுள்ள எஸ்டேட்டுகளில் உற்பத்தி செய்கின்ற தேயிலை முழுவதையும் கொள்முதல் செய்யவில்லையென்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய மூலக் கேள்வி, வால்பாறையில் உற்பத்தியாகும் தேயிலையைக் கொள்முதல் செய்ய அரசு முன்வருமா என்பது. நான் இல்லையென்று பதில் அளித்திருக்கின்றேன். மற்றபடி தேயிலை விலை பற்றிய பட்டியலெல்லாம் மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாமல் அவர் இங்கே எடுத்துச் சொல்லியிருந்தாலும், தமிழக அரசு தேயிலையைக் கொள்முதல் செய்வதில்லை. TANTEA நிறுவனம் மூலம் மட்டும்தான் அதனைக் கொள்முதல் செய்கின்றார்கள்.

நீலகிரியில்கூட இதுபோன்ற பிரச்சினை வருகின்றபோது, ஒழுங்குமுறை விற்பனை வணிக வளாகம் ஒன்றை அமைத்து, தேயிலையை உற்பத்திச் செய்யக் கூடியவர்கள் அங்கு கொண்டு வந்து, ஏல முறையில் கூடுதல் விலை கிடைப்பதற்கான ஒரு வாய்ப்பை கடந்த காலத்திலே இந்த அரசு ஏற்பாடு செய்தது. இப்போதும்கூட நீலகிரி மாவட்டத்தில் TANTEA மற்றும் தமிழ்நாடு சிறு தேயிலை உற்பத்தியாளர்களின் தொழில் கூட்டுறவு தேயிலை தொழில் நிறுவன கூட்டமைப்பு நிறுவனங்களால் (INDCOSERVE) தேயிலை கொள்முதல் செய்யப்படுகிறதே தவிர,

2010 மே 11]

அரசு கொள்முதல் செய்வதற்கு வாய்ப்பில்லை என்பதை நான் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறையில் சென்னியப்பா, மணலி, சஞ்சிதா, ஸ்ரீராம், ஹைபாரஸ்ட் போன்ற எஸ்டேட்டுகளில் தயார் செய்யப்படுகின்ற தேயிலைகளைத் தனியார் கொள்முதல் செய்கிறார்கள். நான் விலை வித்தியாசத்தைச் சொல்வதற்குக் காரணம், அவர்கள் ரூ.40/-க்கு தயார் செய்து, ரூ.110/- முதல் ரூ.140/- வரை... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோவை தங்கம் கேள்வியை மட்டும் கேளுங்கள். நீங்கள் மூலக் கேள்வியை விட்டு வெளியில் போகாதீர்கள். மூலக் கேள்வியை ஒட்டி துணை வினாவைக் கேளுங்கள்.

முற்பகல் 9–40

திரு. கோவை தங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விலை வித்தியாசத்திலே நிறைய இலாபம் வருகிறது, அதனாலே அரசாங்கம் கொள்முதல் செய்ய வேண்டுமென்று சொல்ல வருகிறேன். இதனை அரசினுடைய தொழிற்சாலையான TANTEA கூட எடுத்துச் செய்யலாம். இப்போது அரசே கொப்பரைத் தேங்காயைக் கொள்முதல் செய்கிறது. அதைத்தான் இப்போது விவசாயிகள் விரும்புகிறார்கள். ஆகவே, கொப்பரைத் தேங்காயை அரசு கொள்முதல் செய்வதைப்போல, தேயிலையையும் கொள்முதல் செய்ய வேண்டுமென்பதைத்தான் என்னுடைய வேண்டுகோளாக வைக்கின்றேன். கொள்முதல் செய்து அரசே ஏற்று நடத்தினால், அரசுக்கு மிக அதிகமான இலாபம் கிடைக்கும். தனியாருக்குக் கிடைக்கின்ற இலாபம் தவிர்க்கப்படும். தொழிலாளர்களும் நல்ல சம்பளமும், போனசும் பெறுவார்கள். வால்பாறையில் உற்பத்தியாகும் தேயிலைகளைக் கொச்சினுக்குக் கொண்டுபோய் விற்கிறார்கள். ஆகவே, மீண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன் வால்பாறையிலே ஒரு கொள்முதல் நிலையத்தை அமைத்து, வால்பாறையில் உற்பத்தியாகின்ற தேயிலையை அரசே கொள்முதல் செய்ய வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்தி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரே வார்த்தையில் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று சொல்லிவிட்டு உட்காரலாம். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொப்பரைத் தேங்காயைக்கூட மாநில அரசாங்கம் கொள்முதல் செய்வது இல்லை. TANFED நிறுவனத்தின்மூலம் மத்திய அரசாங்கம்தான் கொள்முதல் செய்கிறது. ஆனால், தேயிலையைப் பொறுத்தவரை மாநில அரசாங்கம் கொள்முதல் செய்கின்ற வாய்ப்பு இல்லை. தனியார் குறைந்த விலையிலே வாங்கி அதிக இலாபத்திலே விற்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவிக்கின்றார்கள். அதனுடைய விவரத்தை எழுதித் தந்தால், அதனை உரிய அதிகாரிகளுக்கு அனுப்பி விசாரித்து, தேயிலை உற்பத்திச் செய்யக்கூடிய விவசாயிகளை ஏமாற்றக்கூடிய நிலை இருக்குமானால், அவர்களுக்கு நல்ல விலை கிடைப்பதற்கு அரசின்மூலம் ஏற்பாடுகள் செய்ய முடியும்; கொள்முதல் செய்வதற்கான வாய்ப்பு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன்.

திரு. அ. சௌந்திரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி தேயிலை குறிப்பாக, ஊட்டி தேயிலை என்றால் உலக அளவில் பிரசித்திபெற்ற தேயிலை. அங்கு TANTEA மூலமாக 15 ஃபாக்டரிகளும், INDCOSERVE மூலமாக சுமார் 17 ஃபாக்டரிகளும் இயங்குகின்றன. அங்கு உற்பத்தியாகும் தேயிலை கொச்சினுக்குச் சென்று ஏல மையம் அமைப்பதாலும், குன்னூரிலே உள்ள ஏல மையத்தில் சிண்டிகேட் அமைப்பதாலும் தேயிலை விற்பனையில் தேயிலை உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலை கிடைப்பது இல்லை என்பதால் விவசாயிகள் உள்பட தேயிலை உற்பத்தியாளர்கள் வருத்தம் தெரிவிக்கின்றார்கள். குறிப்பாக, கீழ்ப் பகுதிகளில் தேயிலையில் கலப்படம் வருகிறது என்றவொரு நிலைப்பாடும் இருக்கிற காரணத்தால், தேயிலையை அரசே கொள்முதல் செய்து, Civil Supplies Corporation வாயிலாக வழங்கலாம். பொது மக்களுக்கு 50 ரூபாய்க்கு அடிப்படைப் பொருள்களை வழங்குகின்ற தலைவர் கலைஞர் அரசு, காலை நேரத்தில் மக்களை எழுப்புகின்ற தேயிலையையும் தூய்மையாக,

2010 மே 11]

சுத்தமாக வழங்குவதற்கு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தேயிலை சாகுபடி பரப்பளவு 71,922 எக்டர். கோயம்புத்தூர், நீலகிரி, தேனி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய எல்லா மாவட்டங்களிலும் சேர்த்து உற்பத்தியாகின்ற தேயிலை 6 இலட்சத்து 47 ஆயிரத்து 298 டன். இங்கு நம்முடைய திரு. கோவை தங்கம் அவர்கள் கேட்ட கேள்விக்கு அளித்த பதிலைத்தான் மாண்புமிகு உறுப்பினருக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். TANTEA நிறுவனம்மூலம்தான் கொள்முதல் செய்யப்படுகிறது, அரசு கொள்முதல் செய்வதில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 163, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ஹசன் அலி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

163—

ஆசிரியர் பயிற்சி

***57849—திரு. கு. ஹசன் அலி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் தொகுதியில் ஆசிரியர் பயிற்சி மையம் மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இராமநாதபுரம் தொகுதியில் ஆசிரியர் பயிற்சி மையம் மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ஹசன் அலி.